# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**ஆணை நாள்: 03.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். SA226/F/2018**

**திரு ப. பாலகிருஷ்ணன் ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமை உதவியாளர்,**
**மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்**
**சிறுபான்மையினர் நல அலுவலகம்,**
**திருநெல்வேலி. ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **14.08.2017** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **18.05.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **13.07.2019** |

******

## ஆணை

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (03.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு ப. பாலகிருஷ்ணன், திருநெல்வேலி மற்றும் தலைமை உதவியாளர் / பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், திருநெல்வேலி ஆஜரானார் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 14.08.2017 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் திருநெல்வேலி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அவர்கள் தங்கியிருக்கும் அரசு குடியிருப்பில் பொருத்தப்பட்டுள்ள குளிரூட்டி சாதனம் அரசின் எந்தத் துறையிலிருந்து பொருத்தப்பட்டது, அவ்வாறு அரசுத் துறை பொருத்தியிருந்தால் அதற்கான செலவு பட்டியல் நகல் கேட்டும், மாறாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் தனது சொந்த பணத்தில் மேற்படி குடியிருப்பில் ஏ.சி. மெசின் பொருத்தியிருந்தால் அதற்கான செலவு பட்டியல் நகல் கேட்டும், ஏ.சி. மெசின் பொருத்த அரசு விதிப்படி உயர் அலுவலர்களின் அனுமதி பெறப்பட்டதா, இல்லையெனில் தன்னிச்சையாகப் பொருத்தப்பட்டதா, உயர் அலுவலரின் அனுமதி பெறப்பட்டிருந்தால் அனுமதி வழங்கப்பட்டதன் ஆணை நகல் கேட்டும், திருநெல்வேலி மாவட்ட பிற்படுத்தப்பட்டார் நலத்துறை விடுதிகளில் பணிபுரியும் இல்லக்காப்பாளர், காப்பாளினிகளில் ஒரே விடுதியில் மாறுதலே இல்லாமல் தொடர்ந்து 5 வருடங்களுக்கு மேல் பணியாற்றி வரும் இல்லக் காப்பாளர், காப்பாளினிகளின் பெயர் / விடுதி ஊர் / பட்டியல் மற்றும் அந்த இல்லத்தில் மேற்படி காப்பாளர், காப்பாளினிகள் பணிபுரிந்து வரும் காலம் அதாவது எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள் என்று கேட்டும், இது போன்ற தகவல்களை 1 முதல் 16 இனங்களில் கேட்டு பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தலைமை உதவியாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகம், திருநெல்வேலி அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார்.

3. இதுகுறித்து 06/09/2017 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், இனம் வாரியாகத் தகவல்களை அளித்துள்ளார். திருப்தியடையாத மனுதாரர், பிரிவு 19 (1)-ன்கீழ் 09/10/2017 தேதியிட்டு முதல் மேல் முறையீட்டு மனுவை அனுப்பி, தான் கோரிய 1 முதல் 16 இனங்களுக்கும் சரியான, முழுமையான தகவல்கள் / நகல்கள் தனக்கு அளிக்கப்படவில்லை என்று தெரிவித்து, அவற்றைத் தனக்குப் பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி வழங்கக் கேட்டுள்ளார். இதுகுறித்து 10/11/2017 தேதியிட்டு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் (பொ), திருநெல்வேலி அவர்கள் மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தில், மனுதாரரின் மேல் முறையீட்டு மனுவைப் பரிசீலித்ததில், மனுதாரர் காலங்கடந்தும், உரிய படிவத்தில் விண்ணப்பிக்காததாலும், பிரிவு 19-ன்படி மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ளார். அதன்பின்னர், மனுதாரர் பிரிவு 19 (3)-ன்கீழ் 08/01/2018 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பி, தான் கோரிய தகவல்கள் / நகல்கள் தனக்கு வழங்கப்படவில்லை என்றும், எனவே அவற்றைத் தனக்குப் பெற்றுத் தருமாறும் கேட்டுள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் ஏற்கனவே 29.08.2018 அன்று விசாரணை நடைபெற்று அதில் மனுதாரரும், பொதுத்தகவல் அலுவலரும் ஆஜராகாத நிலையில், இவ்வழக்கு பிறிதொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டு, இவ்வழக்கு இன்று (03.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் விடுபட்ட இனங்களான 1 முதல் 8, 11 முதல் 13 வரை உள்ள இனங்களுக்கு தகவல் வழங்காததால் தான் கோரிய தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- **மேல்முறையீட்டாளர் கோரியுள்ள** விடுபட்ட இனங்களான 1 முதல் 8, 11 முதல் 13 வரை உள்ள இனங்களுக்கு **தகவல்கள் உரிய காலத்திற்குள் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இவ்வாணை கிடைக்கப் பெற்ற** 15 **தினங்களுக்குள்** மேல்முறையீட்டாளர் கோரியுள்ள முழுமையான தகவல்களை **ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு** 7(6)**ன்படி கட்டணமின்றி மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி வைத்து**, **மேல்முறையீட்டாளர் அதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது**.
- தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 7(1)ன் படி உரிய காலத்தில் தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் **மீது** இவ்வாணையம் **தனது கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்து கொள்கிறது.** மேலும் எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் நிகழாதவாறு பார்த்துக்கொள்ளுமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கடுமையாக எச்சரிக்கின்றது.
- **மேல்முறையீட்டாளருக்கு ஏறத்தாழ மூன்று வருட காலத்திற்கும் மேலாக பதில் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு** 20(1)**ன் கீழ் தகவல் வழங்காததற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**
- **மேல்முறையீட்டாளர்** 14.08.2017 **தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA226/F/2018
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமை உதவியாளர்,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலகம்,
திருநெல்வேலி.

மனுதாரர்
திரு ப. பாலகிருஷ்ணன்,
சாருபாலா குடி,
550, எம்.என். அப்துல் ரஹ்மான் முதலாளி நகர்,
வி.மு. சத்திரம்,
திருநெல்வேலி-627011.

Copy to: Judgement File/ Spare.
JE/ PA-11.11.2020